Education, Sabaragamuwa Province/ Weekly School Department of Education, Sabaragamuwa Province/ Weekly School Department of Education, Sabaragamuwa Province/ Weekly School

## கணிதம்

தரம் 10

வாரம் 41

**அலகு : அமைப்புகள்**

**இவ்வாரத்துள் பெற்றுக்கொள்ளக் கூடிய கற்றற்பேறுகள் :**

- கவராயத்தையும் நேர்விளிம்பையும் பயன்படுத்தி அடிப்படை ஒழுக்குகள் நான்கை அமைத்தல்
- சமாந்தர கோடுகளைக் கொண்ட நேர்கோட்டுத் தளவுருக்களை அமைத்தல்

**மாணவர் செய்ய வேண்டிய செயற்பாடுகள் :**

- கணித பாடம் பகுதி II பாடப்புத்தகத்தின் பக்கம் 123, 124 ஆகியவற்றை நன்கு வாசிக்க.
- ஒரு புள்ளியை வைத்து O எனப் பெயரிடுக.
- கவராயத்தில் ஒரு மாறாத் தூரத்தைப் பெறுக.
- கவராயத்தின் கூர் முனையை O வில் வைத்து வட்டமொன்றை வரைந்து கொள்க.
- பாடப்புத்தகத்தின் பக்கங்கள் 125, 126 ஐ நன்கு வாசித்து செயற்பாடு 2 இன் படிமுறைகளைப் பின்பற்றி ஒரு நேர்கோட்டின் செங்குத்து இருசமகூறாக்கியை வரைக.
- பாடப்புத்தகத்தின் பக்கங்கள் 126, 127 ஐ நன்கு வாசித்து செயற்பாடு 3 இன் படிமுறைகளைப் பின்பற்றி ஒரு நேர்கோட்டின் சமாந்தர கோடுகளை வரைக.
- பாடப்புத்தகத்தின் பக்கங்கள் 127, 128 ஐ நன்கு வாசித்து செயற்பாடு 3 இன் படிமுறைகளைப் பின்பற்றி ஒரு கோண இருசமகூராக்கியை வரைக.
- பாடப்புத்தகத்தின் பயிற்சி 28.1 இற்கான விடைகளை எழுதுக.
- மேலதிக விளக்கங்களுக்காக கீழே தரப்புட்டுள்ள இணையத்தள இணைப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ளவும்.
- இச்செயலட்டையின் இறுதியில் வழங்கப்பட்டுள்ள கணிப்பீட்டு வினாக்களுக்கு விடையளிக்க.
- அனைத்து வினாக்களுக்குமான விடைகளை உங்கள் பாட ஆசிரியரிடம் வழங்கி சரிபார்த்துக் கொள்க.

**மேற்படி செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தக்கூடிய புத்தகங்கள், Website, LMS பாடம் கற்றல் உபகரணங்கள் :**

**ethaksalawa :** https://youtu.be/tPxFD723ZC4

**Youtube :** https://youtu.be/4NZ8EO57znU

https://youtu.be/DTFmod7093o

**கணிப்பீடு :**

1. AB = 6 cm ஆகவுள்ள நேர்கோடொன்றை வரைக. A மற்றும் B ஆகியவற்றை மையாகக் கொண்டு 4 cm ஆரையாகக் கொண்ட இரு வட்டங்களை வரைக.
2. PQ = 6 cm ஆகவுள்ள நேர்கோடொன்றை வரைக. A மற்றும் B ஆகிய புள்ளிகளுக்கு சமதூரத்தில் அமையும் ஒழுக்கை வரைக.
3. 6 cm ஆகவுள்ள நேர்கோடொன்றை வரைக. அந்நேர்கோட்டிற்கு 3 cm தூரத்தில் அமைந்துள்ள ஒழுக்கினை வரைக.
4. நேர்கோடொன்றின் செங்குத்து இருசமகூராக்கி தொடர்பான அறிவைப் பயன்படுத்தி 9.5cm நீளமுள்ள கோடொன்றை சமனான 4 பகுதிகளாக பிரிக்க.
5. (i) PQ = 6 cm ஆகவுள்ள நேர்கோடொன்றை வரைக.
   (ii) $P\hat{Q}R = 120^0$ ஆகுமாறு கோணத்தை அமைத்து QR = 7 cm ஆகுமாறு R எனும் புள்ளியை அமைக்க.
   (iii) Q மற்றும் R ஆகியவற்றிற்கு சமதூரத்தில் அமைந்துள்ள புள்ளிகளின் ஒழுக்கினை அமைத்து அது நீட்டப்பட்ட PQ சந்திக்கும் புள்ளியினை S எனப் பெயரிடுக.
   (iv) PQ இற்கு சமாந்தரமாக R இனூடாக நேர்கோடொன்றை அமைத்து மேலே (iii) இல் வரையப்பட்ட ஒழுக்கினைச் சந்திக்கும் புள்ளியைT எனப் பெயரிடுக.